**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP.No.189/2024**

பெயர் :– தனலெட்சுமி(P.W.–1)
க/பெ. :–செல்வமுத்துக்குமரன்
தேதி :– 21.08.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை:–**

விபத்து எந்த தேதியில் நடந்தது என்று தெரியுமா என்றால் 16.03.2024 அன்று காலை 10.30 மணியளவில் நடந்தது. எனது கணவர் தலையணை வியாபாரம் பார்த்துவிட்டு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்துகொண்டிருக்கும்போது அதே கிழக்கிலிருந்து மேற்காக வந்த அரசு பேருந்து மோதியதால் காயம் பட்டார். மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரரி மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டார். அங்கு அவர் 3 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். பின்னர் இறந்துவிட்டார். விபத்து சமயத்தில் எனது கணவர் தான் சாலையில் நடுபகுதிக்கு வந்து வாகனத்தை ஓட்டத்தெரியாமல் பேருந்தின் பம்பரில் இடித்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் மாதம் ரூ.30000/– சம்பாதிப்பார் என்று சொல்வதற்குரிய ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது கணவர் தலைக்கவசம் அணிந்து வாகனத்தை ஓட்டியிருந்தால் இந்த விபத்தை தவிர்த்திருக்கலாம் என்றால் எனது கணவர் தலைக்கவசம் அணிந்திருந்தார்,

எனது கணவர் ஓட்டிச்சென்ற TVS வாகனத்தில் அளவுக்கு அதிகமாக பாரத்தை ஏற்றிக்கொண்டு வாகனத்தை ஓட்டியதால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு விபத்து பற்றி நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். விபத்துக்கு யார் காரணம், யாருடைய தவறினால் விபத்து நடந்தது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவர் தான் அதிக பாரத்தை ஏற்றிக்கொண்டு வாகனத்தை ஓட்ட முடியாமல் விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்பதால் எதிர்மனுதாரர் ஓட்டுனரோ மற்றும் பேருந்தின் நிறுவனமோ நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. நான் நஷ்ட ஈடாக ரூ.50,00,000/–

என்று அதிகமாக கேட்பதாலும், இந்த விபத்தை எனது கணவரின் அஜாக்கிரதையால் ஏற்பட்டு அதனால் எதிர்மனுதாரர் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய அவசியம் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.